**செய்தி வெளியீடு எண்: 196** **நாள்: 10.03.2020**

## செய்தி வெளியீடு

சென்னை, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய கூட்ட அரங்கில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் கூட்டம் நடைபெற்றது.

**<u>தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்:</u>**

இக்கூட்டத்தில் மத்திய அரசின் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான மாதிரி நலத்திட்டம் (Model Scheme of Government of India) அடிப்படையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகைகளை உயர்த்தி வழங்குவது குறித்தும்; பிற மாநில வாரியங்களில் வழங்கப்படும் நலத்திட்ட உதவித்தொகைகளுக்கு நிகராக மகப்பேறு உதவித் தொகையினை ரூ. 6,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உதவித்தொகை வழங்குவது மற்றும் திருமண உதவித்தொகையினை ரூ.5,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி வழங்குவது ஆகியவை குறித்தும் அரசுக்கு பரிந்துரை செய்ய வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

16.05.2011 முதல் 29.02.2020 வரை 10,17,908 கட்டுமானத் தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு மொத்தம் 14.19 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.608.47 கோடி செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

**<u>தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம்:</u>**

16 நல வாரியங்களில் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் தவிர பிற வாரியங்களில் மேற்படி நல திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு தேவையான நிதியை வழங்கி வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 16.05.2011 முதல் 29.02.2020 வரை இந்நல திட்டங்களை செயல்படுத்த ரூ. 725 கோடியே 50 இலட்சத்து 34 ஆயிரத்து 753 தமிழக அரசால் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

16.05.2011 முதல் 29.02.2020 வரை 13,49,425 தொழிலாளர்கள் பல்வேறு நல வாரியங்களில் கீழ் பதிவு செய்துள்ளனர். இவ்வாரியங்களில் பதிவு செய்த 23,97,422 தொழிலாளர்களுக்கு இக்காலக்கட்டத்தில் ரூ.725,05,34,753/– அளவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் தொழிலாளர் ஆணையர் முனைவர் இரா.நந்தகோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திரு.சு.பொன்னுசுவாமி அவர்கள், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் முனைவர் ஆ. திவ்வியநாதன் மற்றும் வாரிய பிரதிநிதிகள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**